**Deposition of witness**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**-----------**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, MELUR**

| | | |
|---|---|---|
| Calender | : | O.S.No.202/2019 |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | வா.சா.2.திருமதி.பா.லட்சுமி, க.பெ.ராஜபாண்டியன் |
| Court | : | District Munsif Court, Melur. |
| Name | : | |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of of the 13th day of September 2024

13.09.2024

O.S.No.202/2019

வா.சா.2.திருமதி.பா.லட்சுமி, க.பெ.ராஜபாண்டியன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

முதல் விசாரணை

1. நான் இந்த வழக்கில் தலைமை எழுத்தர், வடக்கு சார்பதிவகம், தல்லாகுளம், மதுரை அவர்களுக்காக அனுப்பப்பட்ட நீதிமன்ற அழைப்பாணையின் அடிப்படையில் மதுரை வடக்கு மாவட்ட பதிவாளர் அவர்கள் 11.09.2024 தேதியில் எனக்கு வழங்கப்பட்ட எழுத்து பூர்வமான அதிகாரத்தின் அடிப்படையில் நான் இன்று இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க முன்னிலையாகி உள்ளேன். எனகசு வழங்கப்பட்ட எழுத்து பூர்வ அதிகாரம் நீ.மா.சா.ஆ**-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மதுரை வடக்கு சார்பதிவ ஆள்வரைக்குட்பட்ட நிலங்களை 28.03.1997ம் ஆண்டுக்கு முன்பு வரை வெவ்வேறு மாநில சார்பதிவக அலுவலகத்தில் பதிந்து கொள்வதற்கு வழிவகை இருந்தது. தமிழ்நாட்டினை ஒப்பிடும் போது மற்ற மாநிலங்களில் பதிவு செய்யப்படும் ஆவணங்களுக்கு முத்திரை கட்டணம் சரியான முறையில் செலுத்தப்பட வேண்டிய அவசியம் இல்லாமல் இருந்தது, ஆனால் தமிழ்நாட்டில் அந்தந்த நிலங்களுக்கு குறிப்பிட்ட முத்திரை கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு அதை முறையாக கட்டினால்தான் பத்திர பதிவுகள் நடைபெறும். மதுரை வடக்கு சார்பதிவக ஆள்வரைக்குட்பட்ட நிலங்களை அண்டைய மாநிலங்களில் பதிவு செய்யப்பட்டிருப்பின் அந்த ஆவணத்திற்கான முறையான முத்திரை கட்டணத்தினை தமிழ்நாட்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கட்டி பத்திர பதிவுதுறை தலைவர் உத்தரவின் பேரில் அந்த ஆவணம் மதுரை வடக்கு சார்பதிவக அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது போல் மெமோ வழங்கப்படும்.

2.அழைப்பாணையில் கோரியவாறு கேரளா மாநிலம் பாறசாலையில் கடந்த 20.04.1996ம் தேதியில் இஎம்ஜி சௌந்திராஜன் என்பவரால் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவண எண்.3542/1996 ஆவணம் மற்றும் அந்த ஆவணத்தினை மதுரை வடக்கு சார்பதிவக அலுவலகத்தில் 13.09.2023 தேதியில் பதிவு எண்.2/2023 எண்ணில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தினை நான் கொண்டு வந்துள்ளேன். அந்த ஆவணம் மற்றும் அது தொடர்பான மெமோ ஆகியவற்றின் சான்றிட்ட நகல்கள் மொத்தம் 22 தாள்கள். அந்த ஆவணங்கள் நீ.மா.சா.ஆ**-2** ஆக குறியீடு செய்யப்படுகின்றன. மேற்படி இஎம்ஜி சௌந்திராஜன் என்பவர் பதிவுசெய்து கொடுத்த கிரைய ஆவண எண்.3542/1996ன் உண்மை தன்மையை அறிந்து கொள்வதற்கு எங்கள் அலுவலகத்தில் இருந்து 15.02.2023 தேதியில் கேரளா மாநில பாறசாலையில் உள்ள சார்பதிவக அலுவலகத்திற்கு கடிதம்அனுப்பப்பட்டு அதன் அடிப்படையில் அதன் உண்மை தன்மையை உறுதி செய்து, பாறசாலை சார்பதிவக அலுவலகத்தில் இருந்து பதில் வரப்பட்டது. கேரளா மாநிலம் பாறசாலையில் உள்ள சார்பதிவக அலுவலகத்தில மேற்படி ஆவணத்தினை பொறுத்து தாவா கொடுத்திருந்தால், அந்த ஆவணத்தினை பொறுத்து எங்கள் அலுவலகத்தில் பதிவு எதுவும் ஏற்படாது.

குறுக்கு விசாரணை

1. நான் மாவட்ட பதிவாளர் அலுவலகம் ஒத்தக்கடையில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் செட்டிகுளம் சார்பதிவக அலுவலகம் சம்பந்தபட்ட ஆவணத்தினை தாக்கல் செய்து தாக்கல் செய்ய வந்துள்ளேன். நான் கூறுவது போல் 28.03.1997ம் ஆண்டுக்கு முன்பு வரை தமிழ்நாட்டில் உள்ள நிலங்களை பொறுத்து வெவ்வேறு மாநில சார்பதிவக அலுவலகத்தில் பதிந்து கொள்வதற்கு வழிவகை இருந்தது என்பதனை காண்பிப்பதற்கு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தமிழ்நாட்டினை ஒப்பிடும் போது மற்ற மாநிலங்களில் பதிவு செய்யப்படும் ஆவணங்களுக்கு முத்திரை கட்டணம் சரியான முறையில் செலுத்தப்பட வேண்டிய அவசியம் இல்லாமல் இருந்தது என்பதற்கும் எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கேரளா மாநிலம் பாறசாலையில் இஎம்ஜி சௌந்திராஜன் 20.04.1996ம் ஆண்டு பதிவுசெய்ததாக சொல்லப்படும ஆவணத்தினை மதுரை வடக்கு சார்பதிவக அலுவலகத்தில் பதிவு எண்.2/2023ன் படி பதிவு செய்யப்பட்டதாக (Adjudication) சொல்கிறேன் என்றால் சரிதான். **அவ்வாறு** (Adjudication) பதிவு செய்யப்படும் போது மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் விசாரணை நடைபெறும் என்றால் சரிதான். மனுதாரருக்கு நாங்கள் அறிவிப்பு அனுப்பி அவர்களது அசல் ஆவணத்தினை தாக்கல் செய்து குறை கட்டணத்தினை செலுத்த சொல்லி விசாரணை நடைபெறும். அவ்வாறு அறிவிப்பு அனுப்பியதாக எந்தவித ஆவணமும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் தொலைபேசி மூலமாக கூட மனுதாரருக்கு தகவல் சொல்வோம் என சாட்சி கூறுகிறார். எந்த தொலைபேசி எண்ணில் யாருக்கு அவ்வாறு தொடர்பு கொண்டு அறிவிப்பு செய்தோம் என்பதற்கான குறிப்பு எதுவும் நீ.மா.சா.ஆ-2ல் காணப்படவில்லை என்றால் சரிதான்.

2. இஎம்ஜி சௌந்திராஜனுக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பபட்டடதா என்றால் அவர் கிரையம் கொடுத்த நபர் என்றால் நாங்கள் கிரையம் கொடுத்த நபருக்கு அறிவிப்பு எதுவும் அனுப்ப மாட்டோம், ஆகையால் அவருக்கு அறிவிப்பு அனுப்பவில்லை. நீ.மா.சா.ஆ-2 ஆவணத்தில் அய்யனாருக்கு, இஎம்ஜி சௌந்திராஜன் கிரையம் எழுதிக்கொடுத்ததாக காணப்படுகிறது என்றால் சரிதான். மேற்படி அய்யனாருக்கு நாங்கள் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான், ஆனால் எங்களிடம் மனு கொடுத்தவருக்கு நாங்கள் அறிவிப்பு அனுப்பினோம். மேற்படி ஆவணத்தின் படி அய்யயனாருக்கு தான் நாங்கள் அறிவிப்பு அனுப்பி இருக்க வேண்டும் என்றால் எங்களிடம் யார் மனு கொடுத்தார்களோ அவர்களுக்கு தான் அனுப்பினோம். எங்களிடம் மனு கொடுத்த நபர் யார் என்றால் விஜயகுமார் என்ற நபர் 11.11.2022ல் மனு கொடுத்தார். விஜயகுமார் நீ.மா.சா.ஆ-2 ஆவணத்தில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான், விஜயகுமார்தான் அய்யனாரிடம் சொத்தினை கிரையம் வாங்கியதாக சொல்லி எங்களிடம் மனு கொடுத்துள்ளார்.

3. அவ்வாறு விஜயகுமார் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் கிரைய ஆவணத்தினை எங்களிடம் தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. விஜயகுமார் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் எனக்கு தெரியாது. கேரளா மாநிலம் பாறசாலையில் பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும்

கிரைய ஆவண எண்.3542/1996 ஆவணத்தின் அசல் ஆவணம் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், உண்மை நகல் தாக்கல் செய்துள்ளோம். கிரைய ஆவண எண்.3542/1996 ஆவணத்தின் கண்டுள்ள இளம்ஜி சௌந்திராஜன் கையொப்பம் அவருடையதா என்றால் எனக்கு தெரியாது. இளம்ஜி சௌந்திராஜன் ஒரு காலத்திலும் கேளரா மாநிலம் பாறசாலையில் கிரைய ஆவண எண்.3542/1996 ஆவணத்தினை கிரையம் செய்து கொடுக்கவில்லை என்று இந்த வழக்கில் எதிர்வழக்காடும் போது அந்த ஆவணத்தின் அசல் ஆவணத்தினை தாக்கல் செய்யாமல் நான் சாட்சியம் அளிப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

4. இளம்ஜி சௌந்திராஜன் கிரைய ஆவண எண்.3542/1996 ஆவணத்தில் கையொப்பம் இடவில்லை என்றும், அய்யனார் மோசடியாக கிரையம் பதிந்து கொண்டுள்ளார் என்றும் பிரதிவாதிகள் எதிர்வழக்காடுவது மாவட்ட பதிவாளருக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கேரளா மாநிலம் பாறசாலையில் கிரைய ஆவண எண்.3542/1996 ஆவணத்தின் தொடர்பாக தாவா எதுவும் தாக்கலாகி இருந்தால் அந்த ஆவணத்தினை எங்கள் அலுவலகத்தில் நாங்கள் பதிவு எண்.2/2023 என்று Adjudication செய்ய மாட்டோம் என்றால் சரிதான். அவ்வாறு தாவா எதுவும் இருக்கிறதா என்று பாறசாலை சார்பதிவக அலுவலகத்தில் நாங்கள் கேட்கவில்லை என்றால் சரிதான். விஜயகுமார் மனு கொடுத்ததன் அடிப்படையில் அவரை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் விசாரிப்பார்கள், ஆனால் வாக்குமூலம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. மேற்படி விஜயகுமார் விசாரணையின் போது ஆவணம் தாக்கல் செய்தாரா என்றால் அவர் தாக்கல் செய்ததால்தான் எங்கள் அலுவலகத்தில் endorsement file உள்ளது.

5. அவ்வாறு endorsement செய்ததற்கான அசல் ஆவணம் நீ.மா.சா.ஆ-2ல் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அசல் ஆவணத்தில் endorsement செய்து மனுதாரரிடம் கொடுத்துவிடுவோம், அந்த endorsement நகலை நாங்கள் வைத்துககொள்வோம். அவ்வாறு அசல் ஆவணத்தில் endorsement செய்யப்பட்டதற்கான ஆவணம் உள்ளதா என்றால் நீ.மா.சா.ஆ-2 ஆவணத்தில் உள்ளது. நீ.மா.சா.ஆ-2 ஆவணத்தில் 3வது தாளில் பின்பக்கத்தில் உள்ள endorsement- ஐ சாட்சியிடம் காண்பித்து மேற்படி விஜயகுமார் அசல் ஆவண நகல்கள் 6 தாள்களை பெற்றுக்கொண்டதாகதான் உள்ளது என கேட்ட போது சாட்சி சரிதான் என ஒப்புக்கொண்டுள்ளார். விஜயகுமார் கிரைய ஆவண எண்.3542/1996 ஆவணத்தினை adjudicate செய்வதற்கு அந்த ஆவணத்தினை தாக்கல் செய்யவில்லை என்பது தெரியவருகிறது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அசல் ஆவணத்தினை விஜயகுமார் கொடுத்தாரா என்று எனக்கு நேரிடையாக தெரியாது.

6. மேற்படி விஜயகுமார் கிரைய ஆவண எண்.3542/1996 ஆவணத்தினை adjudicate எதன் அடிப்படையில் உரிமை படைத்தவர் என்றால் அவர் அய்யனாரிடம் இருந்து கிரையம் பெற்றதாக சொல்லி தனக்கு உரிமை இருப்பதாக மனு கொடுத்துள்ளார். அவ்வாறு கிரையம் பெற்றதற்கான கிரையம் எதுவும் எங்கள் அலுவலக கோப்பில் இல்லை என்றால் சரிதான். விஜயகுமாரிடம் எங்கள் அலுவலகத்தில் விசாரணை நடத்தி வாக்குமூலம் பெறப்பட்டதாக நீ.மா.சா.ஆ-2 ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான்.

விஜயகுமாருக்கும், தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் அவர் தவறான தகவல்களை எங்கள் அலுவலகத்தில் கொடுத்து கேரளா மாநில பாறசாலை சாரிபதிவக அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும் கிரைய ஆவண எண்.3542/1996 ஆவணத்தினை மோசடியாக எங்கள் அலுவலகத்தில் Adjudicate செய்துள்ளார் என்றால் சரியல்ல. கிரைய ஆவண எண்.3542/1996 ஆவணம் கேரளா மாநிலம் பாறசாலை சார்பதிவக அலுவலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்ற உண்மை தன்மையை கேட்டுதான் நாங்கள் தகவல் பெற்றுக்கொண்டோம். யார் அந்த ஆவணத்தினை எழுதிக்கொடுத்தார்கள் என்ற விவரத்தினை நாங்கள் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. ஆனால் பாறசாலை சார்பதிவக அலுவலத்தில் இருந்து யார் அந்த ஆவணத்தினை எழுதி கொடுத்தார்கள், யாருக்கு எழுதிக்கொடுத்தார்கள் என்ற குறிப்பாணையுடன் எங்களுக்கு தகவல் கொடுத்துள்ளார்கள்.

7. வாதிகள் தரப்பில் அழைப்பாணை அனுப்பப்பட்ட பின்பு தான், நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். கிரைய ஆவண எண்.3542/1996 ஆவணத்தினை பொறுத்து எழுதிக்கொடுப்பவருக்கு கேரளா மாநிலம் பாறசாலையில் நிலம் இருந்து, அதையும்சேர்த்து பதிந்து கொடுத்தால்தான் தமிழ்நாட்டில் உள்ள தாவா சொத்தினையும் பதிந்து கொடுத்திருக்க முடியும் என்றால் சரிதான். அவ்வாறு கேரளா மாநிலம் பாறசாலையில் இளம்ஜி சௌந்திராஜனுக்கு சொத்து இருந்ததா என்பது எனக்கு தெரியாது என்றாலும் அதை நாங்கள் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றாலும் சரிதான். அது சம்பந்தமான குறிப்பு எதுவும் நீ.மா.சா.ஆ-2ல் இல்லை என்றால் சரிதான். நான் வாதிகளுக்கு ஆதரவாக அவர்கள் கேட்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.